සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

# හින්දු ශිෂ්ටාචාරය I
# இந்து நாகரிகம் I
# Hindu Civilization I

46 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**கவனிக்க :**

- ❊ ***எல்லா*** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❊ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது ***சுட்டெண்ணை*** எழுதுக.
- ❊ விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ❊ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் ***சரியான*** அல்லது ***மிகப் பொருத்தமான*** விடையைத் தெரிந்தெடுத்து, ***அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய*** விடைத்தாளில் ***புள்ளடி*** (X) இடுவதன் மூலம் காட்டுக.

1. வேதங்களுக்குரிய பெயர்களில் ஒன்று அபௌருஷேயம். அதன் பொருள்
   (1) வாயால் ஓதிச் செவியால் கேட்கப்பட்டு வந்தமை
   (2) எழுத்தில் பொறிக்கப்படாமை
   (3) மனிதரால் ஆக்கப்படாத தெய்விகம் வாய்ந்தமை
   (4) அறிவுக் களஞ்சியமாக விளங்குகின்றமை
   (5) ரிஷிகளால் ஆக்கப்பட்டமை

2. உபநிடத நூல்கள் மாத்திரம் அடங்கும் தொகுதி
   (1) சாந்தோக்கியம், முண்டகம், கேன உபநிடதம்
   (2) கடோபநிடதம், ஈசானம், அம்சுமான்
   (3) பிருகதாரண்யகம், சிந்தியம், மயமதம்
   (4) தைத்திரீயம், கேன உபநிடதம், யோகஜம்
   (5) முண்டகம், அம்சுமான், சுப்ரபேதம்

3. நாகரிகம் என்ற சொல் முதன்முதல் இடம் பெறும் தமிழ் நூல்
   (1) நன்னூல் (2) திருமந்திரம் (3) நற்றிணை
   (4) மணிமேகலை (5) திருக்குறள்

4. இருக்கு வேதத்தில் பிரபஞ்ச உற்பத்தி பற்றிக் கூறும் பாடல்
   (1) புருஷ சூக்தம் (2) யம சூக்தம் (3) நாஸதீய சூக்தம்
   (4) பிரம்மச்சரிய சூக்தம் (5) கிருஹ்ய சூக்தம்

5. 'சத்தியமான பொருள் ஒன்றே' என்ற கருத்து முதன்முதல் இடம் பெறும் தொன்மையான நூல்
   (1) அதர்வ வேதம் (2) இருக்கு வேதம் (3) கடோபநிடதம்
   (4) இராமாயணம் (5) சுக்கிர நீதி

6. தர்ம சாஸ்திர நூலாசிரியர்கள் அடங்கும் தொகுதி
   (1) மனு, வசிட்டர், வான்மீகி (2) கௌடில்யர், பராசரர், காளிதாசர்
   (3) காளிதாசர், மனு, வான்மீகி (4) மனு, பராசரர், நாரதர்
   (5) பராசரர், வசிட்டர், வான்மீகி

7. ஐந்தாம் வேதம் எனப் போற்றப்படும் பேரிலக்கியம்
   (1) பகவத்கீதை (2) இராமாயணம் (3) பிருகத்சம்கிதை
   (4) மகாபாரதம் (5) மயமதம்

8. சிவாகமங்கள் இரண்டின் பெயர்கள் அடங்கும் தொகுதி
   (1) வைகானஸம், குமாரதந்திரம் (2) மூலாகமம், பாஞ்சராத்திரம்
   (3) தேவிமாகாத்மியம், காரணம் (4) காரணம், கிராணம்
   (5) சிந்தியம், பிருகத்சம்கிதை

[பக். 2 ஐப் பார்க்க

9. இதிகாசங்களுள் ஒன்றின் ஆசிரியர் ஆதிகவி எனப் போற்றப்பட்டார். அவரது பெயர்
   (1) வசிட்டர் (2) வான்மீகி (3) வியாஸர்
   (4) பாதராயணர் (5) காளிதாசர்

10. திருவுருவங்களைச் செதுக்குவதற்குரிய கருங்கல்லைத் தெரிந்தெடுப்பது பற்றிச் சிவாகமங்களில் கூறப்படும் பகுதி
   (1) பிரதிமாலட்சணம் (2) கர்ஷணம் (3) சிலாபரீக்ஷணம்
   (4) பூமிபரீக்ஷணம் (5) தாமிரபரீக்ஷணம்

11. தர்ம சாஸ்திரங்களில் அரசநீதி பற்றிக் கூறப்படும் பகுதி
   (1) ஆசார காண்டம் (2) வியவகார காண்டம் (3) பிராயச்சித்த காண்டம்
   (4) ஞான காண்டம் (5) கர்ம காண்டம்

12. மகாபுராணங்களுக்குரிய ஐவகை லட்சணங்களை உள்ளடக்கிய தொகுதி
   (1) சர்க்கம், பிரதிசர்க்கம், யோகபாதம், மன்வந்தரம், பிரதிஷ்டை
   (2) சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், வம்சானுசரிதம், மன்வந்தரம்
   (3) வம்சம், வம்சானுசரிதம், ஞான காண்டம், யோகபாதம், சர்க்கம்
   (4) மன்வந்தரம், வம்சானுசரிதம், ஆசாரம், வம்சம், சர்க்கம்
   (5) பிரதிசர்க்கம், கிரியாபாதம், மன்வந்தரம், வம்சம், சர்க்கம்

13. வட இந்திய பக்தி நெறியாளர்களில் மூவரின் பெயர்கள் அடங்கிய தொகுதி
   (1) துளஸிதாசர், விபுலானந்தர், கஸ்தூரிபாய்
   (2) நாமதேவர், அப்பையதீட்சிதர், ஸ்ரீசைதன்யர்
   (3) இராமானந்தர், கபீர்தாஸர், மீராபாய்
   (4) சூர்தாஸர், இராமானந்தர், சங்கரர்
   (5) மெய்கண்டார், துளஸிதாசர், கபீர்தாஸர்

14. இந்துசமய மரபில் அடங்கும் அறுவகைச் சமய நெறிகளில் மூன்றின் பெயர்களைக் கொண்ட தொகுதி
   (1) வைணவம், சௌரம், வீரசைவம்
   (2) சைவம், வைணவம், சாக்தம்
   (3) சைவம், சௌரம், சமணம்
   (4) கௌமாரம், வீரசைவம், காஷ்மீர சைவம்
   (5) சைவம், விசிட்டாத்வைதம், துவைதம்

15. விஜயநகர ஆட்சியில் விருபாட்சகர் கோயிலை அமைத்த மன்னன்
   (1) முதலாம் புக்கன் (2) கரிகரன் (3) கிருஷ்ணதேவராயர்
   (4) அச்சுதராயர் (5) இராமராயர்

16. ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தை நிறுவியவர்
   (1) ஸ்ரீ சாரதாதேவி அம்மையார் (2) சுவாமி சித்பவானந்தர்
   (3) சுவாமி விவேகானந்தர் (4) சுவாமி விபுலானந்தர்
   (5) ஸ்ரீ சைதன்யர்

17. இலங்கையில் பாடல்பெற்ற திருத்தலங்கள் இரண்டின் பெயர்கள் அடங்கிய தொகுதி
   (1) நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம்
   (2) பொன்னம்பலவாணேஸ்வரம், சந்திரசேகரேச்சரம்
   (3) வண்ணை வைத்தீசுவரன் கோயில், நகுலேஸ்வரம்
   (4) திருக்கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம்
   (5) வானவன்மாதேவீஸ்வரம், திருக்கோணேஸ்வரம்

18. முதலாழ்வார்கள் அடங்கும் தொகுதி
   (1) பெரியாழ்வார், நம்மாழ்வார், பேயாழ்வார்
   (2) நம்மாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார்
   (3) பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்
   (4) பெரியாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார்
   (5) பெரியாழ்வார், நம்மாழ்வார், பூதத்தாழ்வார்

[பக். 3 ஐப் பார்க்க

19. இறைவன் திருவருளால் சம்பந்தர் நிகழ்த்திய அற்புதங்கள் அடங்கும் தொகுதி
    (1) தம்பிரான் தோழராதல், பூம்பாவையை உயிர்ப்பித்தல், குளிர்ச்சுரம் நீக்குதல்
    (2) முயலகன் நோய் நீக்குதல், குளிர்ச்சுரம் நீக்குதல், பூம்பாவையை உயிர்ப்பித்தல்
    (3) இடபச் சூலக்குறி பொறிக்கப்பட்டமை, குளிர்ச்சுரம் நீக்குதல், அனல் புனல் வாதம்
    (4) முயலகன் நோய் நீக்குதல், தம்பிரான் தோழராதல், குளிர்ச்சுரம் நீக்குதல்
    (5) பூம்பாவையை உயிர்ப்பித்தல், தம்பிரான் தோழராதல், இடபச் சூலக்குறி பொறிக்கப்பட்டமை

20. பல்லவர் காலக் கோயில் கட்டடக் கலையில் 'சிற்பக்கலைக் களஞ்சியம்' எனப் போற்றப்படுவது
    (1) பல்லாவரக் குகைக் கோயில் (2) திரிமூர்த்தி மண்டபம் (3) தர்மராஜரதம்
    (4) நகுலரதம் (5) அர்ச்சுனரதம்

21. மெய்கண்ட சாத்திரங்களில் ஒன்றாகிய 'சிவஞானசித்தியார்' என்ற நூலை இயற்றியவர்
    (1) உமாபதி சிவாச்சாரியார் (2) அருணந்தி சிவாச்சாரியார்
    (3) மனவாசகங்கடந்தார் (4) உய்யவந்த தேவர்
    (5) மெய்கண்ட தேவர்

22. சக்தியின் மகத்துவத்தைப் போற்றும் 'சௌந்தர்யலஹரி' என்ற நூலை இயற்றியவர்
    (1) பாதராயணர் (2) கோவிந்தர் (3) ஆதிசங்கரர்
    (4) ஸ்ரீரமணர் (5) இராமானுஜர்

23. மட்டக்களப்பு அருணாசல தேசிகர் எழுதிய சைவசமய நூல்களில் மூன்றைக் கொண்டுள்ள தொகுதி
    (1) பிரமாண தீபிகை, பௌஷ்கராகம விருத்தியுரை, சிவயோகரத்தினம்
    (2) சைவசமய சிந்தாமணி, மெய்ஞ்ஞானதீபம், சர்வஞானோத்திராகம சாரசங்கிரகம்
    (3) சதமணிமாலை, நன்னெறி, பிரமாணதீபிகை
    (4) சிவநாமமகிமை, வேதாந்த சூடாமணி, முருகன் மகத்துவநுட்பம்
    (5) வச்சிர தண்டம், சைவவேதாந்தம், தேவாரம் வேதசாரம்

24. விஷ்ணுவும் பிரம்மாவும் சோதிப்பிழம்பின் அடிமுடி தேடிய புராணக்கதையோடு தொடர்புடைய சிவவடிவம்
    (1) திரிபுராந்தகர் (2) பிட்சாடனர் (3) சந்திரசேகரர்
    (4) இலிங்கோற்பவர் (5) தக்ஷிணாமூர்த்தி

25. மீளா நரகம் பற்றிய கருத்தை முன்வைத்த தத்துவவாதி
    (1) சங்கரர் (2) இராமானுஜர் (3) மத்துவர் (4) மெய்கண்டார் (5) கௌடபாதர்

26. ஆழ்வார்களின் பாடல்களைத் தொகுத்தவர்
    (1) இராஜராஜ சோழன் (2) குலோத்துங்க சோழன்
    (3) நாத முனிவர் (4) நம்பியாண்டார் நம்பி
    (5) மகேந்திரவர்மன்

27. புலம்பெயர்ந்த நாடொன்றில் ஆகம முறையிலும் பல்லவர் கால சிற்ப அமைப்பிலும் அமைந்த கோயில்
    (1) சிட்னி முருகன் கோயில்
    (2) நியூயோர்க் மகாவல்ல கணபதி கோயில்
    (3) ஹொலண்ட் ஸ்ரீவரதராஜ விநாயகர் கோயில்
    (4) டூட்டிங் முத்துமாரியம்மன் கோயில்
    (5) லண்டன் முருகன் கோயில்

28. மகேந்திரவர்மனின் மதமாற்றத்திற்குக் காரணமாக விளங்கிய சமய குரவர்
    (1) சம்பந்தர் (2) சுந்தரர் (3) அப்பர் (4) திருமூலர் (5) மாணிக்கவாசகர்

29. விஷ்ணுவின் அவதாரங்களின் பெயர்கள் அடங்கிய தொகுதி
    (1) வாமனம், கூர்மம், மத்ஸ்யம், அநந்தசயனர், கிருஷ்ணர்
    (2) நாராயணர், கிருஷ்ணர், நரசிங்கர், புத்தர், வியாசர்
    (3) மத்ஸ்யம், வாமனம், கூர்மம், நரசிம்மம், கல்கி
    (4) கிருஷ்ணர், விஷ்ணு, இராமர், வாதராயணர், புத்தர்
    (5) கல்கி, நாராயணர், வாசுதேவர், இராமர், வைகுந்தப்பெருமாள்

30. அறத்துடன் வையத்துள் சிறப்புற வாழ்வதற்கு மக்களுக்கு வழிகாட்டும் நூல்களில் ஒன்று
    (1) மயமதம் (2) திருக்குறள்
    (3) பிரம்ம சூத்திரம் (4) காமாண்டக நீதிசாரம்
    (5) பிருகத் சம்கிதை

[பக். 4 ஐப் பார்க்க

8035

31. இருக்கு வேத பிரம்மச்சரிய சூக்தம் விளக்கி நிற்பது
    (1) பொருளியல் ஒழுங்கு பற்றி
    (2) தெய்வ வழிபாட்டு முறை பற்றி
    (3) இருக்கு வேதகால கல்விமுறை பற்றி
    (4) குற்றங்களுக்குரிய தண்டனை பற்றி
    (5) பண்டைய கல்வி நிறுவனங்கள் பற்றி

32. "குடிமக்களுக்கு எவை நன்மை பயக்கின்றனவோ அவையே அரசனுக்கு உண்மையில் நன்மையை அளிக்கின்றன" என அரசநீதி பற்றிக் கூறியவர்
    (1) கௌடில்யர் (2) பீஷ்மர் (3) அர்ச்சுனன்
    (4) கிருஷ்ணதேவராயர் (5) சுவாமி விவேகானந்தர்

33. பண்டைய வானியல் கோட்பாடுகளில் 'புளிஷ' கோட்பாடு குறிப்பது
    (1) கிரகங்களின் அசைவு பற்றிய கணிப்பு
    (2) நீள்வட்டப்பாதை, நட்சத்திரங்களின் தோற்றம், மறைவு பற்றிய விபரம்
    (3) சந்திரக் கோட்பாடு
    (4) வருடம் 365 நாட்களைக் கொண்ட விபரம்
    (5) யுகங்கள் பற்றிய விபரம்

34. யாக வேதிகை, அளவைப் பிரமாணங்கள் மற்றும் கணித விதிமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அமைக்கப்படுவது பற்றிக் கூறுவது
    (1) சிரௌத சூத்திரம் (2) பிரம்ம சூத்திரம் (3) சுல்வ சூத்திரம்
    (4) கல்ப சூத்திரம் (5) கிருஹ்ய சூத்திரம்

35. ஆதிசங்கரின் குருவானவர்
    (1) வியாசர் (2) பரசுராமர் (3) கோவிந்த பகவத்பாதர்
    (4) பாதராயணர் (5) ஈஸ்வர கிருஷ்ணர்

The National e-learning Portal for The General Education

- மேல்வரும் பகுதிகளில் தரப்பட்டுள்ள சொற்களில் **இவ்விரண்டு** சொற்கள் குறிப்பிட்ட ஒரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் இல. **36** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான தொகுதியைத் தெரிவுசெய்து, விடைத்தாளில் அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>பிரதிஷ்டை | B<br>விசித்திரசித்தன் | C<br>சரஸ்வதி | D<br>கருட | E<br>மகேஸ்வர |
| F<br>நாரதீயம் | G<br>பரமபாகவத | H<br>உற்சவம் | I<br>கங்கை | J<br>சித்திரகாரப்புலி |

36. ஆகமக் கிரியை மரபுடன் தொடர்புடைய தொகுதி
    (1) A C (2) A E (3) A H (4) A I (5) C E

37. விஷ்ணுவின் அவதாரங்கள், அவதாரக் கதைகள் பற்றிக் கூறும் மரபுடன் தொடர்புடைய நூல்கள் அடங்கிய தொகுதி
    (1) C F (2) C J (3) D F (4) D G (5) E F

38. குப்தர் கால மன்னர்களின் விருதுப் பெயர்களைக் கொண்ட தொகுதி
    (1) B E (2) B G (3) B J (4) E G (5) G J

39. புனித நதிகளின் பெயர்களைக் கொண்ட தொகுதி
    (1) A C (2) C D (3) C F (4) C I (5) E I

40. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனோடு தொடர்புடைய விருதுப் பெயர்களைக் கொண்ட தொகுதி
    (1) B E (2) B F (3) B G (4) B J (5) E J

[பக். 5 ஐப் பார்க்க

- இலக்கம் **41** தொடக்கம் **45** வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை **I, II, III, IV** ஆகிய நிரல்களிலிருந்து தெரிவுசெய்து, அத்தொகுதிக்கான இலக்கத்தைக் குறிப்பிடுக.

| I | II | III | IV |
|---|---|---|---|
| A<br>திருவிளையாடற் புராணம் | F<br>ஆத்மீக அனுபவம் | K<br>முதல் தமிழ் பேராசிரியர் | P<br>தேவராஜ வழிபாடு |
| B<br>பிருகத் சம்கிதை | G<br>பட்டாரகுரு வழிபாடு | L<br>ஆரியபட்டர் | Q<br>கலாயோகி ஆனந்த குமாரசுவாமி |
| C<br>யாழ்நூல் | H<br>பெரியபுராணம் | M<br>நாட்டியக்கலை | R<br>முத்தமிழ் வித்தகர் |
| D<br>அரச சபையில் திருவெம்பாவை | I<br>பிதாமகக் கோட்பாடு | N<br>சமஸ்கிருத மொழிச் செல்வாக்கு | S<br>கொன்றை வேந்தன் |
| E<br>அழகியல் ரசா அனுபவம் | J<br>துறவு வாழ்வு | O<br>கந்தபுராணம் | T<br>தன்வந்திரி |

41. நாவலர் வசன நடையில் எழுதியும் உரை எழுதியும் நூல்களைப் பதிப்பித்த பணிகளோடு தொடர்புடைய தொகுதி
    (1) A F M S (2) A H O S (3) A J N S (4) C H M R (5) E H O R

42. சுவாமி விபுலானந்தரது சமய, கல்வி மற்றும் கலைப் பணிகளோடு தொடர்புடைய தொகுதி
    (1) A J N T (2) C J K R (3) D J N S (4) E G M R (5) E J M S

43. தென்கிழக்காசிய நாடுகளில் நிலவிய இந்துப் பண்பாட்டு அம்சங்களோடு தொடர்புடைய தொகுதி
    (1) A J L T (2) B I O T (3) C H M S (4) D G N P (5) D H O P

44. இந்துக் கலைமரபோடு தொடர்புடைய தொகுதி
    (1) A I K P (2) B F N P (3) C G O R (4) E F M Q (5) E H M S

45. இந்து அறிவியற் துறையோடு தொடர்புடைய தொகுதி
    (1) A H M S (2) B I L T (3) C I L Q (4) D I N T (5) E I N R

- மேல்வரும் இலக்கம் **46** முதல் **48** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள ஐந்து விடயங்களில் ஒன்று மற்றையவற்றோடு **பொருந்தாதுள்ளது**. அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.

46. (1) ஸ்ரீ கிருஷ்ணர் (2) சங்கரர் (3) மத்துவர்
    (4) வேதாந்த தேசிகர் (5) மெய்கண்டதேவர்

47. (1) திருச்செந்தூர் (2) திருப்பரங்குன்றம் (3) பழமுதிர்ச்சோலை
    (4) திருவாரூர் (5) சுவாமிமலை

48. (1) காஞ்சி புராணம் (2) தணிகை புராணம் (3) சேது புராணம்
    (4) தக்ஷிணகைலாச புராணம் (5) திருவொற்றியூர் புராணம்

[பக். 6 ஐப் பார்க்க

49. மேல்வரும் கூற்றுகளில் தர்மம் தொடர்பாகப் **பொருத்தமற்ற** கூற்று ஒன்று உள்ளது. அதனைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.
    (1) மகாபாரதம் இந்துப் பண்பாட்டிற்குரிய தர்மம் பற்றிய விடயங்களை உள்ளடக்கிய பேரிலக்கியமாகும்.
    (2) மகாபாரதம், இராமாயணம் ஆகியன தருமத்தின்வழி வாழ வழிகாட்டுவனவாகும்.
    (3) இராவணன் தருமத்தின்வழி வாழ்ந்தவன்.
    (4) பகவத்கீதை தர்மம் பற்றி விளக்குகிறது.
    (5) மகாபாரதம் பிற்காலத்தில் தர்மம் பற்றிய சிந்தனை வளர்ச்சிக்குப் பங்காற்றியுள்ளது.

50. மேல்வருவனவற்றுள் நாட்டாரியல் அறங்களுக்குப் **பொருத்தமற்றதைத்** தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.
    (1) சத்தியம் செய்தல்
    (2) சுற்றம் பேணாமை
    (3) நீதியை நிலைநாட்டல்
    (4) கற்புநெறி
    (5) பெற்றோர், பெரியோரைக் கனம் பண்ணல்

❊ ❊ ❊

The National e-learning Portal for The General Education

8035

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved] AL/2013/46/T-II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව **ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව** ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் **இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்** இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka **Department of Examinations, Sri Lanka** Department of Examinations, Sri Lanka Department

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
**General Certificate of Education (Adv. Level) Examination, August 2013**

**නව නිර්දේශය**
**புதிய பாடத்திட்டம்**
**New Syllabus**

හින්දු ශිෂ්ටාචාරය II
இந்து நாகரிகம் II
**Hindu Civilization II**

**46 T II**

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இல் எவையேனும் **இரண்டு** வினாக்களையும், **பகுதி II** இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** "இந்துப் பண்பாட்டு வளர்ச்சியில் குப்தர் காலம் பொற்காலமாகும்."
இக்கூற்றினை மேல்வருனவற்றின் அடிப்படையில் ஆராய்க.
- (அ) இக்கால இந்துப் பண்பாட்டு வளர்ச்சியை அறிய உதவும் மூலாதாரங்கள்
- (ஆ) அரசர்களும் சமயப் பண்பாடும்
- (இ) இலக்கியங்கள்
- (ஈ) நுண்கலைகள்

**2.** சோழர் காலத்தில் ஏற்பட்ட சமய பண்பாட்டு வளர்ச்சியினை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.
- (அ) சமய பண்பாட்டு வளர்ச்சியில் அரசர்களின் பங்கும் பணியும்
- (ஆ) சைவ வைணவ இலக்கியம்
- (இ) கோயிற் கட்டடக்கலை மற்றும் நுண்கலைகளின் வளர்ச்சி

**3.** இந்து சமய நெறிகளில் ஒன்றாகிய காணபத்தியத்தின் சிறப்பம்சங்களை மேல்வரும் தலைப்புகளில் பரிசீலிக்குக.
- (அ) காணபத்திய நெறியின் தோற்றமும் வளர்ச்சியும்
- (ஆ) விநாயகர் திருவுருவும் தத்துவக் கருத்துக்களும்
- (இ) கணபதிக்குரிய வழிபாட்டு முறைகள்

## பகுதி II

**4.** "வேதாந்த தத்துவ வளர்ச்சியில் மற்றுமொரு பரிமாணமே விசிஷ்டாத்வைதமாகும்."
இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.
- (அ) விசிஷ்டாத்வைதம் பற்றிய விளக்கம்
- (ஆ) தத்துவத்திரயம் பற்றிய முக்கிய அம்சங்கள்
- (இ) பிரபத்தியும் ஆன்ம விடுதலையும்

**5.** சைவசித்தாந்த ஆன்மக் கோட்பாட்டின் பிரதான அம்சங்களை மேல்வரும் தலைப்புகளின் அடிப்படையில் ஆராய்க.
- (அ) ஆன்மா பற்றிச் சைவசித்தாந்தம் தரும் விளக்கம்
- (ஆ) ஆன்மாவும் மும்மலங்களும்
- (இ) ஆன்மாவும் இறைவனும்
- (ஈ) முக்திப்பேறு

**6.** "இந்து விக்கிரகக் கலையின் பெருமையை உலகறியச் செய்தது சிவனது நடராச வடிவமே."
இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் தலைப்புகளில் பரிசீலிக்குக.
- (அ) நடராச வடிவத்தின் தோற்றப் பொலிவு
- (ஆ) நடராச வடிவம் கொண்டு விளங்கும் தத்துவங்கள்
- (இ) சிவானந்த நடனம் பற்றிய கலாவிமர்சகரது கருத்துக்கள்

**7.** இலங்கையிலே பொலனறுவைக் காலத்தில் (கி.பி. 1000 - 1250) ஏற்பட்ட இந்து சமய கலாசார வளர்ச்சியின் பிரதான அம்சங்களைப் பரிசீலனை செய்க.

**8.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **நான்கினைப்** பற்றிச் சுருக்கமான குறிப்புகள் எழுதுக.
- (அ) இந்துப் பண்பாட்டில் இசைக்கலை
- (ஆ) தயானந்த சரஸ்வதி
- (இ) கண்ணகி வழிபாடு
- (ஈ) அருணகிரிநாதர்
- (உ) புராதன இந்து அரசியற் கோட்பாடுகள்
- (ஊ) உபநிடத மகாவாக்கியங்கள்

* * *